

# ஊர்ப்புறப் பறவைகள் கணக்கெடுப்பு
# Great Backyard Bird Count (GBBC)
# &
# eBird
## ஓர் அறிமுகக் கையேடு

**GBBC-INDIA**
Great Backyard Bird Count - India

ப. ஜெகநாதன்

**Suggested Citation**

Jeganathan, P. (2015) *Oorpurapparavaigal Kanakeduppu* (Great Backyard Bird Count - GBBC) & eBird - *Oor Arimugak Kaiyedu* (An Introductory Guide). In Tamil. Nature Conservation Foundation & BirdCountIndia. Downloaded From BirdCountIndia. (<http://www.birdcount.in/>). Downloaded on________

Nature Conservation Foundation
3076/5, IV Cross, Gokulam Park,
Mysore - 570 002, India
www.ncf-india.org

**www.birdcount.in**

The text of this document is licensed under

AttributionNonCommercialShareAlike 4.0 International (CC BYNCSA 4.0)
<http://creativecommons.org/licenses/by&nc&sa/4.0/>

Copyright for images remain with the respective photographers

***படங்கள் அனைத்தும் ப. ஜெகநாதன்.***
***கீழ்க்கண்டவற்றைத் தவிர***
***மயில் (பக்கம் 5) பச்சைக்கிளி (பக்கம் 15)*** -Kalyan Varma

# உள்ளடக்கம்

மக்கள் அறிவியல் (citizen science) ஓர் அறிமுகம்..................................2

ஊர்ப்புறப் பறவைகள் கணக்கெடுப்பு
Great Backyard Bird Count (GBBC) - ஏன்?..........................................3-4

ஊர்ப்புறப் பறவைகள் கணக்கெடுப்பு (GBBC) - எப்போது?........................5

ஊர்ப்புறப் பறவைகள் கணக்கெடுப்பு (GBBC) - எப்படி?............................6-7

எது முழுமையான பறவை பட்டியல் ?................................................. 8

மக்கள் அறிவியல் சில கேள்விகள் – பதில்கள்......................................... 9

பறவை ஆர்வலர்கள் கடைபிடிக்க வேண்டிய அடிப்படை விதிகள்................ 10-12

பறவை பார்த்தல் – சில தகவல்கள், ஆலோசனைகள்................................13

## eBird - ஓர் அறிமுகம்

eBird - என்றால் என்ன? ..............................................................15

eBird - ஏன்? ......................................................................16

கணக்கை ஏற்படுத்திக் கொள்ளுதல் ..............................................17

கணக்கின் தேவைகளை நிர்ணயித்தல் ...........................................18

பறவைகள் பட்டியலை தயாரித்தல் ...............................................19-27

இந்தியப் பறவைகளின் களக்கையேடுகளும்,
பறவைகள் தொடர்பான பிற நூல்களும் ..........................................28

இந்தியப் பறவைகள் தொடர்பான சில இணைய தளங்கள்/பக்கங்கள் ...........29

# மக்கள் அறிவியல் (citizen science)- ஓர் அறிமுகம்

காட்டுயிர்களை, இயற்கையான வாழிடங்களை பாதுகாப்பதிலும், இது சம்பந்தமாக நடைபெறும் அறிவியல் ஆராய்ச்சிகளிலும் பொதுமக்கள் பங்களிக்க முடியுமா? என்றால், நிச்சயமாக முடியும். சொல்லப் போனால் பல வித அறிவியல் ஆராய்ச்சிகளிலும், பல்லுயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் பொதுமக்களின் பங்களிப்பு மிகவும் அவசியம். தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியினால் இது போன்ற பங்களிப்புகள் மென்மேலும் பெருகிவருகின்றன. பொதுமக்கள் அறிவியல் ஆராய்ச்சிக்கு உதவும் இத்திட்டத்திற்கு மக்கள் அறிவியல் (citizen science) என்று பெயர். மக்கள் அறிவியல் திட்டங்களுக்குப் பங்களிக்கும் ஒவ்வொருவரும் மக்கள் விஞ்ஞானி (citizen scientist) ஆவர்.

புறவுலகின் மேல் ஆர்வத்தைத் தூண்ட, கரிசனம் காட்ட மற்றொரு வழி பொது மக்களையும், மாணவர்களையும், இயற்கை ஆர்வலர்களையும் அறிவியல் ஆராய்ச்சியில், மக்கள் அறிவியல் திட்டங்களில் பங்கு பெற வைத்தல். இதனால் புறவுலகினைப் பற்றிய புரிதலும், இயற்கையின் விந்தைகளை நேரிடையாக பார்த்து அனுபவிக்கும் வாய்ப்பும், அதே வேளையில் இது சம்பந்தமாக நடக்கும் ஆராய்ச்சிகளுக்கு நேரிடையாக பங்களிக்கும் வாய்ப்பும் கிடைக்கும்.

மக்கள் அறிவியல் திட்டங்களின் தலையாய நோக்கங்களில் ஒன்று, இத்திட்டங்களில் பங்கு பெறுவோர் வெறும் தகவல் சேகரிக்கும் வேலையை செய்பவர்களாக மட்டும் இல்லாமல் அதை ஏன் செய்கிறார்கள் எனும் அறிவியல் பின்னனியை தெரிந்து கொள்வதற்கும், அதைப் பற்றிய அறிவை மென்மேலும் பெருக்கிக் கொள்ளும் ஆர்வத்தைத் தூண்டுவதற்கும், ஒரு பொறுப்பான இயற்கைவாதிக்கான பண்பை வளர்ப்பதற்காகவும் தான்.

பல்லுயிர்ப் பாதுகாப்பிற்கும், சுற்றுச்சூழல் பேணலுக்கும் சூழியல்வாதிகளும், காட்டுயிர் ஆராய்ச்சியாளர்களும், சுற்றுச்சூழல்வாதிகளும் மட்டுமே பங்களிக்க வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. சுற்றுச்சூழல் பாதுகாப்பு, இயற்கைப் பாதுகாப்பு, புறவுலகின் பால் கரிசனம் முதலியவை இந்த பூமியில் வாழும் ஒவ்வொருவருக்கும் அவசியம் இருக்க வேண்டிய பண்புகளில் ஒன்று. மக்கள் அறிவியல் திட்டங்கள் அதற்கான வாய்ப்பை அனைவருக்கும் அளிக்கின்றன. மக்கள் அறிவியல் திட்டத்திற்கு ஊர்புறப் பறவைகள் கணக்கெடுப்பு (Great Backyard Bird Count - GBBC) ஒரு சிறந்த உதாரணம். இதில் பறவை ஆர்வலர்கள், மாணவ, மாணவியர்கள், பொது மக்கள் என யார் வேண்டுமானாலும் பங்குபெறலாம்.





# Great Backyard Bird Count (GBBC)
# ஊர்ப்புறப் பறவைகள் கணக்கெடுப்பு ஏன்?

உலகம் முழுவதும் உள்ள பறவைகளை ஒரே நேரத்தில் ஒவ்வொர் ஆண்டும் கணக்கிடுவதால் பறவைகளின் எண்ணிக்கையில் ஏற்படும் மாற்றங்களை ஆண்டு தோறும் கண்காணிக்க முடியும். ஓரிடத்தில் அவற்றின் எண்ணிக்கையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை வைத்து அதற்கான காரணங்களை கண்டறியவும் முடியும்.

இது போன்ற நீண்ட காலத் திட்டங்களின் முடிவுகள் பறவைகளின், அவற்றின் இருப்பிடங்களின் பாதுகாப்பிற்கு இன்றியமையாதது. உதாரணமாக பூமிச் சூடாதலினால் (Global Warming) எந்த அளவிற்கு பறவைகள் பாதிப்படைகின்றன என்பன போன்ற கேள்விகளுக்கு விடையறிய முடியும். பல்லுயிர் பாதுகாப்பிற்கு நீண்ட கால ஆராய்ச்சி முடிவுகள் பேருதவியாக இருக்கும். இந்த ஆராய்ச்சி முடிவுகளுக்கு ஏற்றவாறு நாம் உயிரினங்களின் வாழிடங்களுக்கு தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

இதன் மூலம் நாம் வாழும் இப்பூமியின் சூழலில் ஏற்படும் பல்வேறு மாற்றங்களை அறிந்து கொள்ள முடியும். உதாரணமாக வலசை வரும் பறவைகளை ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வந்து சேரும் நாட்களை ஆண்டாண்டு காலமாக கண்காணித்து வருவதன் மூலம் புறச்சூழலில் ஏற்படும் காலநிலை மாற்றங்களை (climate change) கணிக்க முடியும்.

இது போன்ற உலகளாவிய, நாடுதழுவிய கணக்கெடுப்பின் மூலம் சில பறவைகளின் பரவலை வெகு விரைவில் அறிந்து கொள்ள முடியும். உதாரணமாக சிட்டுக் குருவி அழிந்து வருகின்றன என்கிற ஒரு (தவறான) செய்தியை பலரும் சொல்லி வந்த நிலையில், நடத்தப்பட்ட நாடு தழுவிய citizensparrow எனும் திட்டத்தின் மூலம் 1 ஏப்ரல்-15 ஜூன் வரை இணைய கணக்கெடுப்பு (online survey) எடுக்கப்பட்டது. இந்த ஆராய்ச்சி முடிவின் வாயிலாக சிட்டுக்குருவிகள் இந்தியாவில் பல இடங்களிலும் பரவியிருப்பதும், பல இடங்களில் நல்ல எண்ணிக்கையில் இருப்பதும், ஓரிரு மாநகரங்களின் குறிப்பிட்ட சில பகுதிகளில் அற்றுப்போனதும் தெரிய வந்தது. இந்தத் திட்டத்தின் ஆராய்ச்சி முடிவுகளை இங்கே (http://citizensparrow.in/index.php?r=site/page&view=reports) காணலாம்.

# Great Backyard Bird Count (GBBC)
# ஊர்ப்புறப் பறவைகள் கணக்கெடுப்பு ஏன்?

### இந்தப் பறவை கணக்கெடுப்பில் பங்கு கொள்வதால் யாருக்கு என்ன பயன்?

பொதுமக்கள், இயற்கை ஆர்வலர்கள், மாணவ மாணவியர்கள் அனைவரும் ஆராய்ச்சியாளர்களுக்கும், பறவையியலாளர்களுக்கும், சூழியல் விஞ்ஞானிகளுக்கும் உதவி புரியும் ஒரு அரிய வாய்ப்பாக இதைக் கருதலாம்.

பறவைகள் அழகானவை. அவற்றைப் பார்த்தும் அவற்றின் குரலைக் கேட்டும் நாம் வியக்கிறோம், மகிழ்கிறோம். நாம் பார்த்து மகிழும் பறவைகளையும் அவற்றின் வாழிடங்களையும் பாதுகாப்பது நம் கடமை. அதற்கு ஒரு வாய்ப்பாக இதைக் கருதலாம்.

நமது சொந்த பறவை பட்டியலை (Personal Bird Checklist) சேர்த்து ஒரே இடத்தில் (eBird மூலமாக) வைக்க இத்திட்டத்தை பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்தக் கணக்கெடுப்பு இந்த நான்கு நாட்களில் உலகம் முழுவதும் நடைபெறும். ஒரு உலகலாவிய பறவைகள் கணக்கெடுப்பில் நாமும் பங்கு கொள்கிறோம் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

அது போலவே பறவைகளைப் பற்றி அவற்றின் எண்ணிக்கையைப் பற்றி நாம் அனைவரும் சமர்ப்பிக்கும் ஒவ்வொறு தகவலும் பறவைகளுக்கு மட்டுமல்லாமல், மனித குலத்திற்கும் இன்றியமையாதது.

நாம் வாழும் சூழல் நல்ல நிலையில் உள்ளதா இல்லையா என்பதை சுட்டிக்காட்டுவதில் பறவைகள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து குறிப்பிட்ட வகைப் பறவைகள் குறைந்து போனால் அல்லது முற்றிலுமாக அற்றுப் போனல் அது எதைக் குறிக்கிறது? அச்சூழல் அவ்வகைப் பறவைகளுக்கு தகுந்ததாக இல்லை என்பதைத் தானே? அச்சூழல் கூடிய விரைவில் அங்கு வசிக்கும் மனிதர்களுக்கும் வாழத்தகுந்ததாக இல்லாமல் போகலாம் அல்லவா? பறவைகள் சிறந்த சூழியல் சுட்டிக்காட்டிகள் (Ecological Indicators). ஆகவே அவற்றைத் தொடர்ந்து கண்காணிப்பதால் நாம் வாழும் சூழலில் ஏற்படும் மாற்றங்களையும் அறிந்து கொள்ள இயலும்.

உலகம் முழுவதும் நடைபெறும் இந்த பறவைகள் கணக்கெடுப்பில் உங்களுக்குப் பிடித்த பறவைகளும், நம் வீட்டினருகில் நாம் தினமும் பார்த்து ரசிக்கும் பறவைகளும் இடம்பெறும் என்பதில் பெருமை கொள்ளலாம் அல்லவா?

# Great Backyard Bird Count (GBBC)
# ஊர்ப்புறப் பறவைகள் கணக்கெடுப்பு

# எப்போது?

ஊர்ப்புறப் பறவைகள் கணக்கெடுப்பு பொதுவாக உலகம் முழுவதிலும் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம் நடைபெறும். அமெரிக்காவில் உள்ள கார்னெல் பறவையியல் ஆராய்ச்சிக் கூடமும் (Cornell Lab of Ornithology), தேசிய அடுபான் சங்கமும் (National Audubon Society) சேர்ந்து 1998ல் இந்த பறவைகள் கணக்கெடுக்கும் மக்கள் அறிவியல் திட்டத்தை தொடங்கியது. ஊர்ப்புறப் பறவைகள் கணக்கெடுப்புதான் (GBBC) பறவைகள் கணக்கெடுப்பிற்கான முதல் இணைய வழி மக்கள் அறிவியல் திட்டம்.

TheCornellLab of Ornithology

Audubon

இதுவரை சுமார் 100,000 பேர் ஒவ்வொரு பிப்ரவரி மாதமும் நடக்கும் இந்த நான்கு நாள் கணக்கெடுப்பில் பங்கு பெற்றுள்ளனர். இந்த ஊர்ப்புறப் பறவைகள் கணக்கெடுப்புத் திட்டம் 2013 முதல் உலகமெங்கும் நடத்தப்பட்டு வருகிறது.

birdcount.in
BIRD COUNT INDIA

இந்தியாவில் நடக்கும் இந்தக் கணக்கெடுப்பை Bird Count India எனும் பறவைகள் கணக்கெடுக்கும் மற்றும் கண்காணிக்கும் கூட்டமைப்பு ஒருங்கிணைக்கிறது. இக்கூட்டமைப்பில் இந்தியா முழுவதிலும் உள்ள பல்வேறு பறவை ஆர்வலர்கள், அமைப்புகள், ஆராய்ச்சி நிறுவனங்கள், உறுப்பினராக இருக்கின்றனர்.

முழு உறுப்பினர்கள் விவரங்களுக்கு http://www.birdcount.in/partners/ பக்கத்தைப் பார்க்கவும்.



**GBBC-INDIA**
**Great Backyard Bird Count - India**

# Great Backyard Bird Count (GBBC)
# ஊர்ப்புறப் பறவைகள் கணக்கெடுப்பு எப்படி?

**இக்கணக்கெடுப்பிற்கு மக்கள் விஞ்ஞானிகள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான்:**

*1. இந்தக் கணக்கெடுப்பை எங்கு வேண்டுமானாலும் செய்யலாம். ஊர்ப்புறங்களில், வயல்வெளிகளில், ஏரி, குளங்களில், வீட்டிலிருந்து கொண்டே, நீங்கள் வேலை செய்யும் இடங்களில் இருந்து கொண்டே, என எங்கு வேண்டுமானாலும் பறவைகளைப் பாருங்கள் அவை எத்தனை இருக்கின்றன என்பதை கணக்கிடுங்கள். ஆனால் ஓரிடத்தில் இருந்து குறைந்தபட்சம் 15 நிமிடங்களுக்காவது பறவைகளை பார்த்து எண்ணி குறித்துக்கொள்ள வேண்டும்.*

*2. பார்க்கும் பறவைகளை அடையாளம் கண்டு அவற்றின் எண்ணிக்கையை கணக்கிடுங்கள். (எ.கா: 5-சிட்டுக்குருவி, 2-காகம், 3 - மைனா). மிகப் பெரிய பறவைக்கூட்டங்களை எண்ணுவது அவ்வளவு எளிதல்ல. எனினும், முடிந்த அளவிற்கு சரியாகக் கணிக்கவும்.*

*3. ஒவ்வொரு நாளும் (13-16 பிப்ரவரி) கணக்கிட்டு எழுதி வைத்திருக்கும் பட்டியலை, ஒரே நாளில் வெவ்வேறு இடங்களில் பறவைகளைப் பார்த்து கணக்கிட்ட பட்டியலையும், ஒரு நாளில், ஒரே இடத்திலிருந்து, வெவ்வேறு நேரங்களில் பறவைகளைப் பார்த்து கணக்கிட்டு எழுதி வைத்திருக்கும் பறவை பட்டியல்களை eBird இணையதளத்தில் சமர்ப்பிக்கவும்.*

*ஒரு வேளை ebird (www.ebird.org) இணையத்தில் நீங்கள் பதிவு செய்யாமல் இருந்தால் உடனே உங்களது பெயரிலோ அல்லது உங்களது நிறுவனத்தின் பெயரிலோ அல்லது குழுவின் பெயரிலோ பதிவு செய்து கொள்ளுங்கள்.*

## பறவை பட்டியலை இணைய தளத்தில் உள்ளிடுதல்

*இணைய தளத்தில் உங்களை பதிவு செய்து கொண்டவுடன் நீங்கள் பறவைகளைப் பார்த்து பட்டியலிட்ட இடத்தை கூகுள் வரைபடத்தில் (google map) கண்டறியவும். ஒரு வேளை அந்த இடத்தின் அட்சரேகை/தீர்க்கரேகை (latitude/longitude) தெரிந்திருந்தால் அதன் மூலமாகவோ, ஊரின், தெருவின் அடையாளங்களை வைத்து கூகுள் வரைபடத்தில் பறவைகள் பார்த்த இடத்தைக் குறித்துக் கொள்ளவும்.*

## நேரமும், நாளும், பறவை கணக்கிடல் முறையும்

*பறவைகளைக் கணக்கிட எடுத்துக் கொண்ட நேரத்தையும் குறித்தல் வேண்டும். பறவைகளை பார்க்க ஆரம்பித்த நேரம், அதை செய்து முடித்த நேரம், பறவைகள் கணக்கிடலில் பங்கு கொண்டது எத்தனை பேர் முதலிய விவரங்களையும் பதிவு செய்ய வேண்டும். பறவைகள் கணக்கிட்ட நாளையும், அதைச் செய்த முறையையும் (பயணித்துக்கொண்டா, ஓரிடத்திலிருந்து கொண்டா, தற்செயலாகப் பார்த்ததா என்பதை)பதிவு செய்தல் வேண்டும்.*

# Great Backyard Bird Count (GBBC)
# ஊர்ப்புறப் பறவைகள் கணக்கெடுப்பு எப்படி?

## நீங்கள் பறவைகளை பொதுவாக மூன்று வகைகளில் பார்த்து கணக்கிடலாம்.

பயணித்துக்கொண்டே (Travelling)- ஓரிடத்தில் நில்லாமல் நடந்து கொண்டோ, அல்லது வண்டியில் பயணித்துக் கொண்டோ பறவைகளைப் பார்த்து கணக்கிடுதல். (எ. கா: பூங்காவிலோ, காட்டுத் தடத்திலோ, ஏரி ஓரமாகவோ நடந்து சென்று அல்லது காரில் பயணித்துக் கொண்டு பறவைகளை பார்த்து கணக்கிடுதல்). எவ்விதமாக பயணித்தாலும் பறவை பார்த்தலும், கணக்கிடுதலும் உங்கள் முக்கியப் பணியாக இருத்தல் வேண்டும்.

ஓரிடத்தில் நின்று கொண்டு (Stationary)- ஓரிடத்தில் நின்று கொண்டு உங்களைச் சுற்றியுள்ள பறவைகளைப் பார்த்து கணக்கிடுதல். (எ.கா: உங்கள் வீட்டு மொட்டை மாடியில் நின்று கொண்டு, குளக்கரையில் நின்று கொண்டு, பஸ் ஸ்டாண்டில் பஸ்ஸிற்காக காத்திருக்கும் வேளையில்).


தற்செயல் நிகழ்வு (Incidental) – பறவை பார்த்தலும் அதைக் கணக்கிடுதலும் உங்கள் முக்கிய பணியாக இல்லாமல், வேறு வேலை செய்து கொண்டிருக்கும் போதோ, பயணித்துக் கொண்டிருக்கும் போதோ, தற்செயலாக பார்த்த பறவைகளின் தோராயமான கணக்கிடல்.

கூடிய வரை முதலிரண்டு (Travelling & Stationary) முறைகளில் பறவைகளைக் கணக்கிடவும். அவ்வகையில் சமர்ப்பிக்கப்பட்ட பறவை பட்டியலே எதிர்காலத்தில் அதில் குறிக்கப்பட்டுள்ள பறவைகளின் எண்ணிக்கை குறித்த பகுப்பாய்விற்கும், ஒப்பிடலுக்கும் பெரிதும் உதவிபுரியும்.



## எது முழுமையான பறவை பட்டியல் ?

**பறவைகளைப் பார்த்து அவற்றின் எண்ணிக்கையை குறித்துக் கொண்டு** eBird **இணையதளத்தில் உள்ளிட்டு பறவை பட்டியல் தயாரித்தாலும், எல்லா பட்டியல்களுமே முழுமையான பட்டியல்கள்** (Complete checklist) **அல்ல.**




## முழுமையான பட்டியல் என்பது:

**ஓரிடத்திலிருந்து (நின்று கொண்டோ அல்லது நடந்து கொண்டோ) குறைந்தபட்சம் 15 நிமிடங்களுக்காவது பறவைகளை அவதானித்து தயாரிக்கப்பட்ட பட்டியல்.**

**பார்க்கப்பட்ட பறவையினங்கள் அனைத்தையும் சரியாக அடையாளம் கண்டு தயாரிக்கப்பட்ட பட்டியல்கள் (அதற்காக எல்லா பறவைகளும் எல்லாருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆயினும் சந்தேகம் ஏற்படும் போது பார்க்கப்பட்ட பறவை எந்த இனத்தைச் சேர்ந்தது என்பதைக் குறிப்பிடலாம். உதாரணமாக தூரத்தில் பறந்தது அண்டங்காக்கையா, காக்கையா என்பது தெரியாவிட்டாலும்** Crow sp. **எனவும் உண்ணிக் கொக்கா, சின்னக்கொக்கா எனத்தெரியாவிட்டால்** white egret sp. **எனவும் குறிக்கலாம்)**

**தற்காலிக நிகழ்வுப் பட்டியல்கள்** (Incidental) **முழுமையானவை அல்ல.**

**அதாவது சிரத்தை எடுத்து பறவைகளைப் பார்த்து நேரத்தையும், தூரத்தையும் பதிவு செய்யப்பட்ட பட்டியல்களே முழுமையான உபயோகமுள்ள பட்டியல்கள்.**

**இது போன்ற முழுமையான பறவை பட்டியல்களே எதிர்கால பகுப்பாய்விற்கும்** (analysis)**, காலத்திற்கு ஏற்ப பறவைகளின் எண்ணிக்கை எவ்வாறு மாறுகிறது என்பதை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும், எவ்வளவு முறை ஓரிடத்தில் அப்பறவைகளைக் காணமுடியும் என்பதையும் அறிந்து கொள்ள முடியும்.**

**எனினும் தற்செயலாகப் பார்த்து** Incidental **வகையில் உள்ளிட்ட பட்டியல்கள் ஒரு பறவையின் பரவலையும்** (distribution) **அவை ஓரிடத்தில் தென்படும் நேரத்தையும், பருவத்தையும்** (seasonality) **அறிய உதவும்.**

## மக்கள் அறிவியல் (citizen science)
## சில கேள்விகள் - பதில்கள்

**1. கணினி வசதியோ, இணையத் தொடர்போ இல்லாதவர்கள் எப்படி இக்கணக்கெடுப்பில் பங்கு கொள்ள முடியும்?**

பறவை பார்ப்போர், இக்கணக்கெடுப்பில் பங்கு கொள்ள நினைத்தால் கணினி, இணைய வசதிகள் உள்ளவர்களின் உதவியை நாடலாம். இந்தியாவில் இது போன்ற கணக்கெடுப்புக்கள் தற்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாக ஆரம்பமாகி வருகின்றன. எதிர் காலத்தில் அனைவரும் பங்குகொள்ளும் வசதிகள் ஏற்படலாம். இந்நிலை மாறும், மாற வேண்டும். பல வளர்ந்த நாடுகளில் கூட இப்பிரச்சனை இருக்கத்தான் செய்கிறது.

**2. ஒரு வேளை பறவைகளை சரியாக அடையாளம் காணாமல், தவறான பறவைகளை உள்ளிட்டால் என்ன செய்வது? அல்லது ஓரிரு பறவைகளை பார்த்துவிட்டு 100க்கணக்கில் பார்த்தாக பொய்த்தகவலை அளித்தால் என்ன செய்வது?**

ஒரு வேளை பறவையை தவறாக அடையாளம் கண்டு இணையத்தில் உள்ளிட்டு, அது தவறென உணர்ந்தால் மீண்டும் அதை மாற்றிக்கொள்ள eBirdல் வசதிகள் உள்ளது. ஆனால் ஒருவர் வேண்டுமென்றே அதைச் செய்தால் என்ன செய்வது? அதைத் தடுப்பதற்கும், சீர் செய்யவும் அந்த இணையத்தில் சில வசதிகள் உள்ளன. உதாரணமாக தமிழ்நாட்டிலிருந்து ஒருவர் இப்பகுதியில் காணப்படாத பறவை ஒன்றை உள்ளிடுகிறார் என வைத்துக் கொள்வோம். அதை அவர் உள்ளிடும் போதே திரைக்குப் பின்னால் பல வேலைகள் நடைபெறும். இந்த இணையத்தில் உள்ள வடிகட்டிகளால் (filters) அது சரிபார்க்கப்பட்டு அவரிடம் அதற்கான (சரியான விளக்கங்கள், புகைப்படம் முதலிய) ஆதாரங்கள் கேட்கப்படும். அதன் பின் அந்தக் குறிப்பிட்ட பதிவு தமிழ்நாட்டில் உள்ள பல பறவை ஆராய்ச்சியாளார்களுக்கு தெரிவிக்கப்படும். முறையான நுண்ணாய்வுக்குப் பிறகு அப்பதிவு ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிக்கப்படும்.

**3. ஒரு வேளை பறவைகளை பார்க்காமலேயே பார்த்தாக ஒருவர் பொய்ப் பட்டியலைத் தயார் செய்து உள்ளிட்டால்?**

இதுபோன்ற மக்கள் அறிவியல் (Citizen Science) திட்டங்கள் செயல்படுவது மக்களின் உதவியுடன், நாம் அனைவரும் வாழும் இப்பூமியின் நலனுக்காக. ஆகவே இதற்குப் பங்களிக்கும் மக்கள் நேர்மையாக இருந்து உண்மையான தகவலையே அளிப்பார்கள் என்ற நம்பிக்கையில் தான் இத்திட்டங்கள் நடத்தப்படுகின்றன.

## பறவை ஆர்வலர்கள் கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படை விதிகள்:

## நேர்மை

ஆங்கிலத்தில் பறவை பார்த்தலைப் பற்றிய ஒரு கூற்று உண்டு, ''No record at all is better than an erroneous one''. இதைத்தான் பறவை பார்த்தலின் Golden Rule என்பர். அதாவது ஒரு பறவையைத் தவறாக அடையாளம் கண்டு அதைப் பார்த்ததாகச் சொல்வதை விட, நாம் பார்த்ததை குறிப்பிடாமலேயே இருத்தல் நலம். நாம் பார்க்கும் பறவை ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தது தான் என்பதை முற்றிலுமாக உறுதிசெய்துகொண்ட பிறகுதான் நாம் அதை பார்த்ததாகச் சொல்ல வேண்டும். சிறு சந்தேகம் இருந்தாலும் அந்தச் சந்தேகம் தீரும் வரை நாம் பார்க்காததைப் பார்த்ததாகச் சொல்லக்கூடாது. இது பறவை பார்த்தலின் மிக முக்கியமான விதி.

உதாரணமாக தூரத்தில் பறந்து செல்வது காகமா அல்லது அண்டங்காக்கையா எனத் தெரியாவிட்டால் அதை உங்கள் குறிப்பேட்டில் எழுதாமலேயே இருத்தல் நலம். ஆனால் நீங்கள் பார்த்தது காகமாகத்தான் இருக்கக்கூடும் என நம்பினால் ''காகம்?'' என எழுதினால் அது உங்களது நேர்மையைக் காட்டும்.

## பறவைகள் பாதுகாப்பு

பறவை பார்த்தலும், பறவைகளைப் படமெடுத்தலும் வெறும் பொழுதுபோக்கிற்காக இல்லாமல், நம்மை மகிழ்விக்கும் பறவைகளுக்கும், அவற்றின் வாழிட பாதுகாப்பிற்கும் நம்மால் முடிந்த அளவில் பங்களிப்பதும், பாடுபடுவதும் பறவை ஆர்வலர்களின் கடமையாகும்.

பறவைகளை பார்க்க வேண்டும், படமெடுக்க வேண்டும் என்பதற்காக பறவைகளுக்கோ, அவற்றின் வாழிடத்திற்கோ எந்த விதத்திலும் தீங்கிழைப்பதோ, தொந்தரவு செய்வதோ கூடாது.

பறவைகளின் கூட்டினருகில் செல்வதை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும். கூட்டின் அருகில் செல்வதால், அப்பறவைகள் மிகுந்த மனஅழுத்தத்திற்கு உள்ளாகும். இதனால் அவை அக்கூட்டினை தவிர்த்து விட்டுச் செல்லும் அபாயம் உள்ளது. ஒரு வேளை தெரியாமல் கூட்டினருகில் சென்று விட்டால் உடனடியாக அந்த இடத்திலிருந்து அகன்று விடவேண்டும்.

**தாவரங்களினூடாக பதுங்கியிருக்கும் பறவைகளை எப்படியாவது பார்த்துவிட வேண்டும்/படமெடுத்துவிட வேண்டும் என்கிற அதீத ஆர்வத்தில் (அல்லது வெறியில்) சப்தமெழுப்புவதோ, எதையாவது அப்பறவை இருக்குமிடம் நோக்கி விட்டெறிவதோ கூடாது. நாம் பறவைகள் பார்க்க ஒரு இடத்திற்குச் செல்லும் போது, நாம் அங்கிருப்பது பறவைகளுக்கு எந்த வகையிலும் தொந்தரவு அளிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.**

**இரவு நேரங்களில் மரத்தில் அடைந்திருக்கும் பறவைகளையும், இரவாடிப் பறவைகளையும்** (Nocturnal birds) **பார்க்க டார்ச் விளக்கை அவற்றின் மேல் அடித்துப் பார்க்கும் வேளையில் மிகவும் கவனமாகச் செயல்பட வேண்டும். டார்ச் மிகுந்த ஒளி உமிழும் தன்மையுடையதாக இருக்கக் கூடாது. மிதமாக ஒளி உமிழும் டார்சையும் கூட நீண்ட நேரம் அவை இருப்பிடம் நோக்கியோ, அவற்றினை முகத்திலோ அடிப்பதைத் தவிர்க்க வேண்டும். பறவைகளை இரவில் படமெடுக்க அதிக சக்தியுள்ள ப்ளாஷினை உபயோகிப்பதைத் தவிர்க்க வேண்டும். இது பறவை இருக்கும் தூரத்தைப் பொறுத்தது என்றாலும், தூரமாக இருக்கும் பறவைகளைப் படமெடுக்கக் கூட ஓரிரு முறைகளுக்கு மேல் உபயோகித்தல் கூடாது. நினைத்துப் பாருங்கள் உங்கள் முகத்தில் டார்ச்சையோ, ப்ளாஷையோ அடித்தால் எப்படிக் கண்கள் கூசுகிறதோ அதே போலத்தான் பறவைகளுக்கும்.**

**நீங்கள் பறவை பார்க்கப் போகும் இடங்களில் இதுபோல் யாராவது பறவைகளுக்குத் தகாத முறையில் நடந்து கொண்டால், அவர்களுக்கு அவற்றின் தீமைகளை எடுத்துச் சொல்லவும். அதையும் மீறி அவர்கள் தொடர்ந்து செய்து கொண்டிருந்தால் அவர்கள் செய்வதை ஆவணப்படுத்தி (போட்டோ, வீடியோ மூலமாக) தகுந்த அதிகாரிகளிடம் முறையிடுங்கள். பறவைகளை வேட்டையாடுவதையோ, கண்ணி வைத்துப் பிடிப்பதையோ, வேறு வகையில் கொல்வதையோ பார்க்க நேரிட்டால் உடனடியாக அதை (முடிந்தால் புகைப்பட ஆதாரத்துடன்) வனத்துறையினரிடமோ, தகுந்த அதிகாரிகளிடமோ உடனடியாக தெரிவிக்கவும்.**





வீட்டின் அருகில் பறவைகளுக்கு உணவு / பருக தண்ணீர் வைத்தல், செயற்கைக் கூடுகளை அமைத்தல் நம் பறவைகளின் பால் வைத்திருக்கும் அன்பைக் காட்டுகிறது என்பது உண்மைதான். அதேவேளையில் அங்கு வரும் பறவைகளுக்கு நம் வீட்டில் வளர்க்கும், வீட்டினருகில் திரியும் பூனை, நாய் முதலிய வளர்ப்புப் பிராணிகளால் எந்தவித ஆபத்தும் ஏற்படாத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். உணவு, கூடு வைக்கும் இடங்களை வளர்ப்புப் பிராணிகள் வரமுடியாத படி, அவற்றின் உயரத்திற்கு எட்டாத வண்ணம் தேர்ந்தெடுக்க வேண்டும். ஒரு வேளை அதுபோன்ற இடத்தை தேர்வு செய்ய முடியாவிடில் அந்த இடத்தில் பறவைகளுக்கு உணவிடுவதை தவிர்க்க வேண்டும்.

## பறவைகளின் வாழிடத்தை மதித்தல்

நாம் பறவை பார்க்கச் செல்லும் முன் அது பொது இடமா? தனியாருக்குச் சொந்தமான இடமா? அல்லது அனுமதி பெற்றுச் செல்ல வேண்டிய இடமா? என்பதை அறிந்து, தேவைப்பட்டால் தகுந்த அனுமதி பெற்ற பின்னரே அங்கு செல்ல வேண்டும்.

பறவைகள் பார்க்கப் போகும் இடத்தில் குப்பைகளைப் போடுவதைத் தவிர்க்கவும்.

பறவைகள் பார்க்கச் செல்லும் வேளையில் உரக்கப் பேசமல், அமைதியாக இருத்தல் நலம். இதனால் பறவைகளுக்கும் தொந்தரவில்லை, நீங்களும் அவற்றை நீண்ட நேரம் பார்த்து ரசிக்கலாம்.

# பறவை பார்த்தல் - சில தகவல்கள், ஆலோசனைகள்

பார்க்கும் பறவைகளை களக்குறிப்பேட்டில் உடனடியாக எழுதிக்கொள்வது நல்லது. எத்தனை பறவைகள், எந்த இடத்தில் பார்த்தோம், பார்த்த நாள் ஆகிய விவரங்களையும் குறித்துக்கொள்ள வேண்டும்.

பெயர் தெரியாத, இதற்கு முன் பார்த்திராத பறவையைப் பார்க்கும் போது, அதை நன்கு கவனித்து படம் வரைவது, விளக்கமாக குறிப்பெடுத்துக் கொள்வது நல்லது. இது களக்கையேட்டில் பார்த்து அடையாளம் காண உதவும். சந்தேகமிருப்பின் தெரிந்தவர்களிடம் ஆலோசிக்கவும். பலமுறை சரிபார்த்த பின்னர் முடிவுக்கு வரவும். காமிரா இருந்தால் ஆவணத்திற்காக படமெடுத்துக்கொள்ளவும். ஆயினும், களத்தில் சரியாக நெடுநேரம் கவனித்து, பறவைகளின் அங்க அடையாளங்களை (நிறம், அலகு, கால் நீளம், உருவ அளவு முதலிய விவரங்கள்) சரியாக எழுதி வைத்து அல்லது படம் வரைந்து, களக்கையேட்டின் உதவியுடன் பறவையின் வகையை கண்டுபிடிப்பது நல்ல பழக்கம்.




பறவையைப் படமெடுத்து அதை தெரிந்தவர்களிடம் அனுப்பி அவர்கள் மூலம் தெரிந்துகொள்ளலாம். ஆயினும், நாமாகக் கண்டறிவதில் உள்ள இன்பமும் அப்போது ஏற்படும் வியப்பும் அதில் கிடைப்பதில்லை. நமது பட்டியல் நீள வேண்டும் என்பதற்காக அரிய பறவைகளைத்தான் பார்க்க வேண்டும் எனத் தேடி அலைவதைத் தவிர்த்து, நாம் அடிக்கடிப் பார்க்கும் பொதுப் பறவைகளையும் பார்த்து ரசித்து மகிழ்தல் நலம்.



# eBird

www.ebird.org

## ஓர் அறிமுகம்

**நீங்கள் பார்த்த பறவைகளை eBirdல் பட்டியலிட**
**ஓர் வழிகாட்டி**

# eBird என்றால் என்ன?

## உலகளாவிய இணையத்தள பறவைகள் பட்டியல் சேகரிக்கும் திட்டம்.

★ பறவைகளைப் பற்றிய அவதானிப்புகளை இந்த இணையதளம் சேகரிக்கும்.

★ உங்களது பறவைப் பட்டியலை இங்கு சமர்ப்பித்து சேகரித்து வைத்துக் கொள்ளலாம்.

---

## இதனால் யாருக்கு என்ன நன்மை?

★ பறவை பார்ப்போர் பலர் இந்த இணையத்தில் அவர்களது அவதானிப்புகளை சமர்ப்பித்தால், பறவைகளின் பரவலையும், எண்ணிக்கையையும் இந்த இணையதளத்தின் வழியாக அறியமுடியும்.


★ இதன் மூலம் பறவை பார்ப்போரும், பறவை ஆராய்ச்சியாளர்களும், பறவைகளைப் பற்றிய தகவல்களை அறிந்துகொள்ளும் ஆர்வமுள்ள பத்திரிக்கையாளர்களும், பொதுமக்களும் பயனடைவார்கள்.

# eBird ஏன்?

- ★ இது நம்பத்தகுந்த, பாதுகாப்பான இணையதளம்
- ★ உலகம் முழுதும் சுமார் 100000 பறவை பார்ப்போர் இதில் இணைந்துள்ளனர்.
- ★ சுமார் 200 மில்லியன் பறவைக் குறிப்புகள் இதில் உள்ளன.
- ★ பறவை பட்டியலைத் தயாரிக்க எவரும் எளிதில் பின்பற்றக்கூடிய வசதிகளைக் கொண்டது.
- ★ பட்டியலைத் தயார் செய்தவுடன் அதை வரைபடத்தில் பார்த்து அறியும் வசதிகள் கொண்டது.
- ★ நீங்கள் பலகாலம் இங்கு பட்டியலை உள்ளிட்டு சேகரித்து வைக்கும் போது கீழ்க்கண்ட விவரங்களை எளிதில் பார்த்தறிய முடியும்.
- ★ நீங்கள் உங்கள் வாழ்நாளில் இது வரை பார்த்த அத்தனை பறவை வகைகளின் எண்ணிக்கையை பார்த்து அறிந்து கொள்ள முடியும்.
- ★ மாநிலம், மாவட்டம் வாரியாக நீங்கள் பார்த்த பறவைகளின் வகை, எண்ணிக்கையை பார்த்து அறிந்து கொள்ள முடியும்.
- ★ ஒரு வேளை நீங்கள் பார்த்த பறவைகளை படமெடுத்திருந்தால் அதையும் உங்களது பட்டியலுடன் சேர்த்து வைக்கலாம்.
- ★ உங்களது பறவை பட்டியலை பிறருக்கு எளிதில் அனுப்பி வைக்க,படி எடுத்துக்கொள்ள, தரவிறக்கம் செய்து கொள்ளக்கூடிய வசதிகளைக் கொண்டது இந்த இணைய தளம்.


# கணக்கை ஏற்படுத்திக் கொள்ளுதல்


www.ebird.org இணையதளத்திற்குச் சென்று உங்களுக்கென ஒரு கணக்கை உருவாக்கிக் கொள்ளுங்கள்.



# கணக்கின் தேவைகளை நிர்ணயித்தல்


**நீங்கள் பார்த்த பறவைகளின் ஆங்கிலப் பொதுப் பெயர்** (Common Name) **அல்லது அறிவியல் பெயர்** (Scientific name) **அல்லது அவையிரண்டும் பட்டியலில்வருமாறுஉங்களதுதேவைக்கேற்பதேர்ந்தெடுத்துக்கொள்ளவும். அதேபோல மொழியையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளவும். பொதுவாக இந்தியர்களுக்கு** English (India) **பொருந்தும்.**







# பறவைகள் பட்டியலை தயாரித்தல்

**நீங்கள் பார்த்த பறவைகளின் பட்டியலை இந்த இணையதளத்தில் உள்ளிட வேண்டிய வழிமுறைகளை இனி காணலாம்.**





**உங்களது பறவை பட்டியலை உள்ளிட** ""Submit Observations" **ஐ சுட்டவும்**




**நீங்கள் பறவைகளைப் பார்த்த இடத்தினை முதலில் குறிக்க வேண்டும். அதற்கு** **Find it on a Map** **ஐ சுட்டவும். அது உங்களை அடுத்த நிலைக்கு (பக்கத்திற்கு) இட்டுச் செல்லும்.**


# பறவைகள் பட்டியலை தயாரித்தல்




இப்பக்கத்தில் Countryல் Indiaவை தேர்ந்தெடுக்கவும், பின்னர் Tamil Nadu அல்லது நீங்கள் எந்த மாநிலத்தில் இருந்து பறவைகளைப் பார்த்தீர்களோ அம்மாநிலத்தை குறிக்கவும்.


உதாரணத்திற்காக இங்கே Tamil Nadu ஐ எடுத்துக் கொள்வோம்.

அதன் பின் Continue வை சுட்டி அடுத்த நிலைக்குச் செல்லவும்




மாநிலத்தை உள்ளிட்ட பின் அம்மாநிலத்தின் வரைபடம் திரையில் தெரியும்.

# பறவைகள் பட்டியலை தயாரித்தல்





சிவப்பு நிறத்தில் குறிக்கப்பட்டிருக்கும் இடங்கள் பொதுமக்கள் அனைவரும் செல்லக்கூடிய, பறவைபார்த்தலுக்கு ஏற்ற இடம் (Birding Hotspots).

ஒரு வேளை நீங்கள் இது போன்ற இடத்தில் பறவைகளைக் கண்டு பட்டியலிட்டிருந்தால் உடனடியாக அந்த இடத்தைச் சுட்டி (கிளிக் செய்து) உள்நுழைந்து அதைத் தேர்ந்தெடுக்கலாம்.


இல்லையெனில் உங்களின் ஊரின் பெயரை தட்டினால் (எ.கா Chennai) அவ்வூரின் பல பகுதிகளின் பெயர்கள் வரிசையாக கீழறங்கி வருவதைக் காணலாம். இதில் ஏதாவது உங்கள் இடமெனில் அதை தேர்ந்தெடுக்கலாம்.

# பறவைகள் பட்டியலை தயாரித்தல்





**ஒரு வேளை உங்கள் இடம் குறிக்கப்படவில்லையெனில், நீங்கள் பறவை பார்த்த இடத்திலிருந்து அருகிலுள்ள, உங்களுக்குச் தெரிந்த பகுதியின் பெயரைத் தட்டுங்கள் (எ.கா. Pallikkaranai). இது அப்பகுதியின் அருகில் உள்ள இடங்களின் பெயர்களை கொடுக்கும்.**

# பறவைகள் பட்டியலை தயாரித்தல்





நீங்கள் பறவை பார்த்த இடத்தினை கண்டறிந்து அங்கு சுட்டியை வைக்கவும். அந்த இடத்தின் பெயரை வலது பக்கமுள்ள பெட்டியில் இடவும்.




நீங்கள் ஓரிடத்தில் நின்று பறவைகளை கவனித்திருந்தால் அந்த இடத்தை வரைபடத்தில் கூடியவரையில் துல்லியமாகக் குறிப்பது நல்லது. அதற்கு வரைபடத்தில் சுட்டியை இரு முறை அழுக்கி (Double click) வரைபடத்தை பெரிது படுத்தி (zoom செய்து) உங்களிடத்தைக் கண்டறிந்து குறித்துக்கொள்ளவும்.

# பறவைகள் பட்டியலை தயாரித்தல்

## நீங்கள் பறவைகளை பொதுவாக மூன்று வகைகளில் பார்த்து கணக்கிட்டிருக்கக்கூடும்.





**பயணித்துக்கொண்டே (Travelling)- ஓரிடத்தில் நில்லாமல் நடந்து கொண்டோ, அல்லது வண்டியில் பயணித்துக் கொண்டோ பறவைகளைப் பார்த்து கணக்கிடுதல். (எ. கா: பூங்காவிலோ, காட்டுத் தடத்திலோ, ஏரி ஓரமாகவோ நடந்து சென்று அல்லது இரயிலில், பஸ்ஸில், காரில் பயணித்துக் கொண்டு பறவைகளை பார்த்து கணக்கிடுதல்). எவ்விதமாக பயணித்தாலும் பறவை பார்த்தலும், கணக்கிடுதலும் உங்கள் முக்கியப் பணியாக இருத்தல் வேண்டும்.**

**ஓரிடத்தில் நின்று கொண்டு (Stationary)- ஓரிடத்தில் நின்று கொண்டு உங்களைச் சுற்றியுள்ள பறவைகளைப் பார்த்து கணக்கிடுதல். (எ.கா: உங்கள் வீட்டு மொட்டை மாடியில் நின்று கொண்டு, குளக்கரையில் நின்று கொண்டு, பஸ் ஸ்டாண்டில் பஸ்ஸிற்காக காத்திருக்கும் வேளையில்).**


**தற்செயல் நிகழ்வு (Incidental) - பறவை பார்த்தலும் அதைக் கணக்கிடுதலும் உங்கள் முக்கிய பணியாக இல்லாமல், வேறு வேலை செய்து கொண்டிருக்கும் போதோ, பயணித்துக் கொண்டிருக்கும் போதோ, தற்செயலாக பார்த்த பறவைகளின் தோராயமான கணக்கிடல்.**

**கூடிய வரை முதலிரண்டு (Travelling & Stationary) முறைகளில் பறவைகளைக் கணக்கிடவும். அவ்வகையில் சமர்ப்பிக்கப்பட்ட பறவை பட்டியலே எதிர்காலத்தில் அதில் குறிக்கப்பட்டுள்ள பறவைகளின் எண்ணிக்கை குறித்த பகுப்பாய்விற்கும், ஒப்பிடலுக்கும் பெரிதும் உதவிபுரியும்.**

# பறவைகள் பட்டியலை தயாரித்தல்





இந்தியாவில் தென்படும் பெரும்பாலான பறவைகளின் பெயர்கள் இப்பக்கத்தில் பட்டியலிடப்பட்டிருக்கும். இவற்றில் நீங்கள் பார்த்த பறவை எது என்பதை அறிந்து அதன் எண்ணிக்கையை குறிப்பிடவும். ஒருவேளை நீங்கள் பார்த்த பறவையின் எண்ணிக்கை தெரியவில்லை எனில் 'X' என இட்டு நிரப்பவும்.





நீங்கள் பார்த்த பறவைகளையும் அவற்றின் எண்ணிக்கையையும் முழுவதுமாக குறித்த பின்னர் ""Yes" ஐ அழுத்தி அதன் பின் ""Submit" ஐ சொடுக்கவும். எனினும் ஒருவேளை நீங்கள் Incidental முறையில் பட்டியலைச் சமர்ப்பித்தால் "No" என குறிக்கவேண்டும்.

# பறவைகள் பட்டியலை தயாரித்தல்





## உங்கள் பறவை பட்டியல் தயார்





இந்நிலையில் உங்களது பட்டியலை ஒரு முறை மிகக் கவனமாகப் பார்க்கவும், நீங்கள் பார்த்த பறவைகள் அனைத்தும் அதில் இருக்கிறதா? அவற்றின் எண்ணிக்கை சரியா முதலியவற்றை சோதிக்கவும். ஒரு வேளை திருத்தங்கள் ஏதேனும் செய்ய வேண்டியிருந்தால் அதற்கும் வசதிகள் உண்டு. ‘Edit’’ ஐ அழுத்தி தேவையான திருத்தங்களை மேற்கொள்ளவும்.

# பறவைகள் பட்டியலை தயாரித்தல்




இந்த பட்டியலை நீங்கள் படி (Print) எடுத்துக்கொள்ளலாம், தரவிறக்கம் செய்து உங்களது கணிணியில் வைத்துக் கொள்ளலாம். உங்களுடன் பறவைகளை கணக்கிட வந்த நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம்.




ஒருவேளை இந்த இடத்திலேயே வெவ்வேறு நேரங்களில், அல்லது அதே இடத்தில் வெவ்வேறு நாட்களில், அந்த இடத்தில் இல்லாமல் அதனருகில் உள்ள பகுதிகளில் பறவைகளைக் கணக்கிட்டிருந்தால் வலதுபுறம் உள்ள உரலிகளை (link) அழுத்தி பட்டியலை தயாரிக்கலாம்.



# இந்தியப் பறவைகளின் களக்கையேடுகளும், பறவைகள் தொடர்பான பிற நூல்களும்




Ali, S. & Futehally, L. (1967). Common Birds. National Book Trust, India. New Delhi.

Ali, S. (1996). The Book of Indian Birds. Bombay Natural History Society. Bombay.

Rasmussen, P.C. & Anderton, J.C. (2005) Birds of South Asia. The Ripley Guide.Vol.1 and 2. Smithsonian Institution and Lynx Edicions, Washington, D.C. and Barcelona.

Grimmet, R., Inskipp, C & Inskipp, T. (2011). Birds of the In¬dian Subcontinent. Second Edition. Oxford University Press. UK.




***க. ரத்னம். (2002). தமிழ்நாட்டுப் பறவைகள், மெய்யப்பன் தமிழாய்வகம்.***

***மா. கிருஷ்ணன். (2010), பறவைகளும் வேடந்தாங்கலும், (பதிப்பாசிரியர்: பெருமாள் முருகன்), காலச்சுவடு பதிப்பகம்.***

***மா. கிருஷ்ணன். (2002). மழைக்காலமும் குயிலோசையும், (பதிப்பாசிரியர்: சு. தியடோர் பாஸ்கரன்) காலச்சுவடு பதிப்பகம்.***

***ஆதி வள்ளியப்பன். (2009). நாராய் நாராய், அறிவியல் வெளியீடு.***

***ச.முகமது அலி. (1996). பறவையியல் நிபுணர் சலிம் அலி, மலைபடுகடாம்.***

Grubh, R & Grubh S.R ***(2012).*** Wetland Birds of Tamil Nadu & A pictorial Field Guide. ***தமிழகத்தின் நீர்ப்புல பறவைகள்.*** Institute for Restoration of Natural Environment. Nagercoil.

***ச. முகமது அலி.(2012). அதோ அந்த பறவை போல...தடாகம் பதிப்பகம், சென்னை.***

***ஜெகநாதன் &ஆசை (2012). பறவைகள்- ஓர் அறிமுகக் கையேடு. க்ரியா. சென்னை.***

# இந்தியப் பறவைகள் தொடர்பான சில இணைய தளங்கள்/பக்கங்கள்

தமிழ் நாட்டில் பார்க்கப்படும் பறவைகளைப் பற்றி கலந்துரையாட, தகவல்களை பரிமார Tamilbirds (in.groups.yahoo.com/group/Tamilbirds/) எனும் யாஹூ குழுமம் இயங்கி வருகிறது. ஆரம்ப நிலை பறவை ஆர்வலர்கள் பறவைகள் குறித்த சந்தேகங்களையும், ஆலோசனைகளையும் இக்குழுவில் உள்ள அனுபவம் மிக்க பறவை ஆர்வலர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

## மேலும் காண்க

- http://www.kolkatabirds.com/beginners.htm
- http://www.birdcount.in/
- http://uyiri.wordpress.com/category/birds/



nature
conservation
foundation

birdcount.in

BIRD COUNT INDIA